DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

| STC No. | 484/2024 | Crime No. | - | Station | - |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | Pw3– ராஜேந்திரன் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 14.07.2025 |

எதிரி ஆஜர்

முதல் விசாரணை

நான் மயிலம்பாடியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை. கடந்த ஓராண்டுக்கு முன்பு ஒருநாள் காலை 9 –10 மணியளவில், நான் எனது வீட்டில் இருந்தபோது குப்பிச்சிபாளையத்தை சேர்ந்த வரதராஜன் என்பவர் அவரது இருசக்கர வாகனத்தை ஓட்ட பின்னால் அவரது மனைவி லோகேஸ்வரி அமர்ந்து கொண்டு மயிலம்பாடி ஆலமரம் பிரிவு ரோட்டில், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து பவானி ஒலக்கடம் ரோட்டில் வலது புறமாக திரும்ப நின்று கொண்டிருந்தபோது, பவானியில் இருந்து, ஒலக்கடம் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த கார், மேற்படி பைக்கின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டது. நான் வீட்டில் இருந்தேன் சத்தம் கேட்டு அருகில் சென்று பார்த்த போது பைக்கை ஓட்டி வந்த வரதராஜன் என்பவருக்கு வலது கால் பாதத்தில் பலத்த வெட்டுக்காயம் இருந்தது. லோகேஸ்வரிக்கு நெற்றியில் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது. பின்னர் அவர்களுக்கு தண்ணீர் கொடுத்து சிறிது நேரம் அமர வைத்து ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்து ஆம்புலன்ஸ் வந்தவுடன் அவர்களை சிகிச்சைக்காக அனுப்பி வைத்துவிட்டு நான் வீட்டிற்கு சென்றேன். இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.07.14 06:34:04 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.